[9th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு ஒரு முறை விடை அளித்திருக்கிறேன். ஒரு தொழிலுக்கு வாங்கிய கடனை வேறு தொழிலுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கு அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் அங்கிகாரம் பெறாமல் வைப்பதாக இருந்தால் வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அரிசனங்களுக்கு பஸ் உரிமம்

* 261 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும் அரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையில் கூட்டுறவு முறை இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள பஸ் ரூட்டுகள், முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் 12 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் கோயம்புத்தூர், வட ஆற்காடு, திருநெல்வேலி இந்த மூன்று மாவட்டங்களிலும் தான் கூட்டுறவு முறையில் பஸ் ரூட் பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலிருந்து அரிஜனங்கள் கூட்டுறவு முறையில் பஸ் சர்விஸ் நடத்துவதற்கு முன் வரவில்லையா, அல்லது பஸ் ரூட் கேட்டு அரசாங்கத்தால் கொடுக்கப்படவில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கின்ற சட்டப்படி ஒரு சிலருக்குத்தான் கொடுக்கலாம் என்று முடிவு செய்வதற்கில்லை. மத்திய அரசாங்கத்தினிடம் இதைப்பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் சட்டம், இதை எந்த முறையில் திருத்தலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தில் இடமில்லையென்றாலும், இனிமேல் திருத்தப்படுவதில், அரிஜனங்களுக்கு பெர்மிட் கொடுப்பதற்கு தனியாக இடம் பெறுமா ? இதன் அடிப்படையில் விதிமுறை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தை எப்படி மாற்றி அமைப்பது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. 100-ல் பத்து விதம் அதிகப்படுத்துவதாக இருந்தால், அதை அரிஜனங்களுக்கு என்று எப்படி ப்ரிஃபரன்ஸ் கொடுப்பது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : சார், மற்ற இலாகாக்களில் எல்லாம் அரிஜனங்களுக்கு சலுகை காட்டுவது போல், பஸ் ரூட் பெர்மிட் கொடுப்பதிலும் அரிஜனங்கள் அப்ளிகேஷன் செய்திருந்தால், இதில்

[a] Printed as Appendix III on pages 989–990.

9th August 1966]

ஓரளவுக்கு சட்டத்தில் இடம் இல்லையென்றாலும் ஒரு கன்வென்ஷன் என்ற முறையில் அரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று ஆர்.டி.எ.-க்களுக்கு உத்தரவோ அல்லது சர்குலரோ அனுப்பப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நீதி மன்றங்களில் இதைப்பற்றி தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன, கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன, அரசாங்கம் இம்மாதிரி செய்வதற் காக ஆர்.டி.எ.-க்களுக்கு உத்தரவு போடுவது முறை அல்ல என்று.

நிலவியல் ஆராய்ச்சி

* 262 கேள்வி:—திரு. எம். எஸ். செல்வராஜன் } கனம் முதல்
திரு. வை. சங்கரன்
அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் பூகர்ப்ப சர்வே மேற்கொள்ளும்படி, ஐக்ய நாடுகள் சங்க நிபுணர் குழுவினரை நமது ராஜ்ய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்பேரில் ஆராய்ச்சி மேற்கொண் டுள்ளனரா?

(இ) ஆம் எனில், அவர்களது ஆராய்ச்சியின்பேரில் அறிக்கை ஏதேனும் சமர்ப்பித்துள்ளனரா?

(உ) அவ்வறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப் படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have requested the United Nations Special Fund to afford assistance for undertaking intensive geological investigations in the State and they have to take a decision on the request.

(b) & (c) Do not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், ஏற்கனவே பூகர்ப்ப சர்வே செய்திருந்தும், இப்போது நடத்துகின்ற சர்வேயில், புதிய கண்டுபிடிப்புக்கள் துலங்குகின்றன. இதிலிருந்து ஏற்கனவே நடத்திய சர்வே குறைபாடு உள்ளது என்று கொள்ளலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் 'டீட்டெய்ல்ட் இன்வெஸ்டிகேஷன்' முன்பு செய்தது 'ப்ரிமெச்சூர்' என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது.

மின்சார மோட்டார் பம்புகள்

* 263 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-64, 1964-65 ஆகிய ஆண்டுகளில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர், முசிரி ஆகிய ஒவ்வொரு வட்டங்களிலுள்ள குடியானவர்களுக்கு எத்தனை மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்பட்டது?

(இ) வாங்கப்பட்ட பம்பு செட்டுகளில் இதுவரை எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது?